வரையறுத்த குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையால் கம்பனியை தோற்றுவிக்கும் போது ஒப்படைக்கப்பட்ட 6772 ஹெக்டயர் காணிகளில் அரசாங்கத்தின் தலையீட்டின் பேரில் ரூபா 50,586,167 குத்தகைப் பெறுமதியான 1,750.88 ஹெக்டயர் காணிகள் ஏனைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 1992 ஆம் ஆண்டிலிருந்து ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 550.88 ஹெக்டயர்கள் எப்பிரதேசங்களிலிருந்து எத்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்படடிருந்தன என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படிருக்கவில்லை.

(ஆ) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரமின்றி விடுவிக்கப்பட்ட இக்காணிகளுக்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 175,481,744 குத்தகைப் பெறுமதி கம்பனியிடமிருந்து அறவிடவேண்டும் என்பது அமைச்சினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களானது வரையறுத்த குருனாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தெரியப்படுத்துகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மட்டுப்படுத்தல்களும் என்பன மேலே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் என்னுடைய பரிசோதனைகளிலிருந்து தேன்றியதற்கு ஏற்ப கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கிய வகையில் உள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 10.2 ஆம் பிரிவுகள் | 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை சேர்த்துக்கொள்ளப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள ஏற்பாடுகளின் அளவைவிட மிகையான சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 5,547,239 தொகையான மேலதிக சம்பளக் கிரயத்தை கம்பனி மேற்கொண்டிருந்தது. |
| (ஆ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது தொழிலாளர் படிகள் செம்மையாக்கல் படிகள், மருத்துவ படிகள் என்பனவாக ரூபா 8,395,725 மொத்த தொகை மீளாய்வாண்டின் போது கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் படி போதியளவாக இல்லாத விசேட சந்தர்ப்பங்களின் போது மேலதிக எரிபொருளுக்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அங்கீகாரமின்றி இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 4869 லீற்றர் மேலதிக எரிபொருளுக்காக ரூபா 569,623 பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும் எரிபொருள் படிக்கு தகமையற்ற கம்பனியின் MM சம்பளத் தொகுதியிலுள்ள ஐந்து உத்தியோகத்தர்களுக்கு 12,454 லீற்றர் எரிபொருள்களுக்கு ரூபா 1,183,160 பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 161,797,211 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 126,577,293 ஆக இருந்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 35,219,918 முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி வருமானம் ரூபா 26,946,568 ஆல் அதிகரித்தல் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 22,022,520 ஆல் அதிகரித்தல் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 208,145,938 ஆகக் காணப்பட்ட மிகை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது ரூபா 161,797,211 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 319,479,160 ஆகக் காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 275,688,962 வரை குறைவடைந்திருந்தும் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 396,092,116 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து விகிதம் 1:7.5 இலிருந்து 1:6.8 விரைவு விகிதம் 1.67 இலிருந்து 1.63 வரையும் குறைவடைந்திருந்தது. கம்பனியால் நீண்டகால முதலீட்டு வழிகள் தொடர்பாக செலுத்தப்பட்ட அவதானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 35 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேங்காய்களின் விற்பனை விலை அதிகரித்தல், தேங்காய் உற்பத்தி குறைவடைதல் என்பவற்றின் காரணமாக விற்பனை கிரயம் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான தேங்காய் விளைச்சலானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் போதியளவில் நீர்க்கால்வாய் முறைமை இல்லாமை மற்றும் வறட்சிக்கு முகங்கொடுப்பதற்காக விவசாயக் கைத்தொழில் உப முறைமை தொடர்ச்சியாக அமுல்படுத்தாமை தேங்காய் விளைச்சல் குறைந்தமைக்கு காரணமாக இருந்தது.

(ஆ) தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தின் பிரகாரம் ஒரு தென்னை மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் 72 தேங்காய்களாக இருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்ற 08 தோட்டங்களில் அப்பெறுமதி 28 தேங்காய்களுக்கும் 42 தேங்காய்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. கம்பனியால் மண் பரிசோதனை செய்யப்பட்டு அதற்கிணங்க பசளை மற்றும் இரசாயணப் பொருட்கள் ஈடுபடுத்தாமையும் நீர் முறைமை ஏற்படுத்தாமையும் விளைச்சல் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(இ) கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்ற 08 தோட்டங்களில் விளைச்சல் தருகின்ற மரங்களின் எண்ணிக்கையில் 4 சதவீதத்திற்கும் 9 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவிலான உயர்ந்த மரங்கள் காணப்படுவதுடன் கம்பனியால் மாதாந்த தேங்காய் விளைச்சலைப் பிடுங்குதல் இடம்பெற்றிருந்தும் மொத்த தேங்காய் விளைச்சலில் 22 சதவீதம் அளவான 2,386,831 அளவான தேங்காய்கள் விழுந்த தேங்காய்களாகும். அதற்காக மாதாந்தம் தேங்காய் விளைச்சலைப் பிடுங்குதல் உரிய கால வீச்சுக்குள் இடம் பெற்றிருக்காமையும் உயரமான மரங்களில் தேங்காய் பிடுங்குதல் உரிய முறைப்படி இடம்பெற்றிருக்காமையும் விழுந்த தேங்காய்களின் விளைச்சல் அதிகரித்துச் செல்வதற்கு காரணமாக இருந்தது.

(ஈ) கம்பனி நிர்வகிக்கின்ற 08 தோட்டங்களின் மூலம் முதிர்ச்சியடைந்தவைகளாக இனங்காணப்பட்ட 354,715 தென்னை மரங்களில் 58,287 தென்னை மரங்களான 16 சதவீதம் அளவானவை விளைச்சல் அற்ற தென்னை மரங்களாக உள்ளதுடன் உரிய மரங்களை அகற்றி மீண்டும் பயிரிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஒரு ஹெக்டயரில் இறப்பர் பால் விளைச்சல் 809 கிலோகிராம்களாக இருந்தும் கம்பனியால் நிர்வகிக்கப்படுகிள்ற ஒரு ஹெக்டயர் இறப்பரிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விளைச்சல் 689 கிலோகிராம்களாகும். அதற்கினங்க கம்பனி நிர்வகிக்கின்ற 173.47 ஹெக்டயரில் உள்ள இறப்பர் பயிர்ச்செய்கையில் விளைச்சல் தரும் ஆயுள் காலத்தை மிகைத்த இறப்பர் மரங்களை அகற்றி பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பளை தோட்டத்திற்குரிய கித்துல்கெல காட்டில் 11.49 ஹெக்டயர் முழுவதிலும் பரந்துள்ள கருங்கற்கள் கம்பனியின் அறிக்கையின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டிலிருந்து உத்தரவு பெறாத நபர்களால் தோண்டப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டளவில் உத்தரவு பெறாத 06 நபர்களாலும் உத்தரவுப் பத்திரம் பெற்ற 3 நபர்களாலும் தோண்டி எடுத்தல் மேற்கொள்ளப்படிருந்தன. அது தொடர்பாக கம்பனி எதுவித சட்ட நடடிவடிக்கையும் எடுத்திருக்காததுடன் கம்பனியால் இக்கருங்கற்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது கேள்விகள் கோரப்பட்டிருந்ததும் உரிய கேள்விகளை வழங்குதல் 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி வரையும் இடம் பெற்றிருக்காததுடன் வெளிநபர்களால் தோண்டி எடுத்தல் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) கம்பனியின் கடுகம்பள தோட்டத்திற்குச் சொந்தமான எஸ்மோபீல்ட் வனத்தின் 1.34 ஹெக்டயர் காணியில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 2,492,000 செலவு செய்து ஒரு குளத்தை நிர்மாணிப்பதற்காக தீர்மாணம் எடுக்கப்பட்டிருந்ததுடன் குளத்தை தோண்டுவதிலிருந்து கிடைக்கும் மண்ணை குளக்கட்டுக்களை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சியுள்ள மண் 530 கியூப்கள் அளவில் இருக்க வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் குளக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்படாது கம்பனியால் 1000 கியூப்கள் மண்ணை விற்பனை செய்வதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிடப்பட்டவாறு குளம் நிர்மாணிக்கப்படாது மண் விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான 203.46 ஹெக்டயர் வயல் காணிகள் காணப்பட்டிருந்தும் இக்காணி தற்பொழுது குத்தகை விவசாயிகளால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் இக்காணியை மீண்டும் கம்பனியின் பயன்பாட்டிற்குப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தரவுகளின் பிரகாரம் ஒரு முந்திரிகை மரத்தின் சராசரி விளைச்சல் 10 கிலோகிராம் அளவில் உள்ளதுடன் கம்பனியால் பராமரிக்கப்படுகின்ற 13,456 முந்திரிகை மரங்களில் முதிர்ச்சியடைந்த மரங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் 22,943 கிலோகிராம்களாகும். அதற்கிணங்க பெற்றுக்கொள்ளப்படவேண்டிய சராசரி

விளைச்சலில் 17 சதவீதமான விளைச்சல் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தோட்ட முகாமைத்துவத்தால் மரங்களின் கிளைகளை வெட்டுதல் முதலிய நடவடிக்கை உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அதிக முந்திரிகை விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தொழில்நுட்ப சஞ்சிகையின் பிரகாரம் முதிர்ச்சியடைந்த மிளகுச் செடியின் சராசரி விளைச்சல் ஒரு ஆண்டிற்கு உலர்த்திய மிளகு 1 கிலோகிராமிற்கு 2.5 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் இருக்க வேண்டிய போதிலும் கம்பனி நிர்வகிக்கின்ற மூன்று தோட்டங்களில் காணப்படுகின்ற 34.32 ஹெக்டயர்களைக் கொண்ட முதிர்ச்சியடைந்த மிளகுப் பயிர்ச்செய்கையில் 12,013 செடிகள் காணப்பட்டிருந்தும் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உலர்த்திய மிளகு விளைச்சல் 4,853 கிலோகிராம் அதாவது மிளகு செடியிலிருந்து உலர்த்திய மிளகு 0.41 கிலோகிராம் மாத்திரமாகும். போதியளவில் கமத்தொழில் வழிமுறைகளைப் பின்பற்றாமை மற்றும் விவசாய ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளாமை இதற்கான காரணமாக இருந்தது.

## 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அத்தனகல்ல தோட்டத்தில் தம்முல்லஹேன பகுதியில் ரூபா 12,078,708 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலைகளின் இயந்திரங்களின் ஒரு நாள் உற்பத்தி இயலளவு 1000 கிலோகிராம் இறப்பர் பால்களாக இருந்தும் மீளாய்வாண்டின் போது உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்ட இறப்பர் பால்களின் அளவு 50,357 கிலோகிராம்கள் மாத்திரமாகும். அதற்கிணங்க தொழிற்சாலையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தி இயலளவில் 14 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக கம்பனியால் இறப்பர் பால் விளைச்சலை அதிகரிப்பதற்கும் வெளித்தரப்பினர்களிடமிருந்து இறப்பர் பாலை கொள்வனவு செய்வதன் மூலம் உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமை இதற்கான காரணமாக இருந்தது.

## 4.4 ஆளணி நிர்வாகம்

கம்பனியின் தோட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடியாகப் பங்களிப்புச் செய்கின்ற 19 நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இதன் காரணமாக தோட்டங்களின் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாகவும் தாமதமின்றியும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பான விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் உற்பத்தி இலக்குகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றினை அடைந்துகொள்ளும் நடைமுறை பலவீனமான நிலையில் காணப்பட்டது. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | நீண்டகால கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஆளணி நிர்வாகம் | கம்பனியால் சேவையாற்றுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைவடைந்ததன் காரணமாக தொழிலாளர் போதியளவில் இல்லாமல் போகும் ஆபத்து காணப்பட்டது. |
| (ஈ) | செயற்பாட்டுக்கட்டுப்பாடு | ஒரு தென்னை மரத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் விளைச்சல் குறைவடைதல், விஞ்ஞான ரீதியாக தென்னைப் பசளைகளை ஈடுபடுத்தாமை, முறையான பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் பின்பற்றப்படாமை, போதிய நீர் வழங்கல் முறைமைகள் இல்லாமை என்பவற்றின் காரணமாக பயிரிடப்பட்ட நாற்றுக்கள் அழிவடைந்துள்ளமை. |